செ.வெ.எண் 983

Dt 17-12-09

**நிதித் (வழிவகை) துறை, நாள் : டிசம்பர் 17, 2009**

**<u>பத்திரிகைச் செய்தி</u>**

மொத்தம் ரூபாய் 800.00 கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 10 ஆண்டுப் பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் டிசம்பர் 22, 2009 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் பேர வணிகம் செய்தல் திட்டத்தில் (Negotiated Dealing System) மின்னணு படிவத்தில் (electronic format) டிசம்பர் 22, 2009 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**கு.ஞானதேசிகன்,**
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை–9.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9